


# ஆர்.பி.ஐ தங்கத்தை விற்பனை செய்ததா, இல்லையா... சர்ச்சைகளின் பின்னணி என்ன?

இந்திய ரிசர்வ் வங்கி, தனது தங்கக் கையிருப்பில் ஒரு பகுதியை விற்றதாக செய்திகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து ரிசர்வ் வங்கி தங்கக் கையிருப்பில் ஒரு பகுதியை விற்றதாக வந்த செய்திகளை மறுத்தது.

தங்கத்தை விற்றதாக வந்த செய்தி, அமெரிக்காவின் ப்ளூம்பெர்க் எகனாமிக்ஸ் வெளியிட்ட ஆய்வுக்கு (ஜூன் 2) பிறகு வந்தது. அந்த ஆய்வில், மேற்கு ஆசியாவில் நடைபெறும் மோதலால் ஏற்பட்ட நாணய சந்தை அதிர்வுகளின்போது ரிசர்வ் வங்கி தங்கக் கையிருப்பைக் குறைத்து, வெளிநாட்டு நாணயச் சொத்துகளை (அமெரிக்கா டாலர் மற்றும் யூரோ ஆகியவை) அதிகரித்திருக்கலாம். மேலும், மே 22-ம் தேதி முடிவடைந்த இரண்டு வாரங்களில் ரிசர்வ் வங்கி சுமார் 12 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள தங்கத்தை விற்று, 7.5 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயச் சொத்துகளை வாங்கியிருக்கலாம் என மதிப்பிட்டது. ஆனால், ரிசர்வ் வங்கி

**பேராசிரியர் டி.கே.ஜெயராமன்,**
ஆசிய வளர்ச்சி வங்கியின்
முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர்




*மாதாந்தர அறிவிப்பில் (RBI May Monthly Bulletin 2026) வெளியிடப்படும் தங்கக் கையிருப்பு 880.52 டன்னாக மாறாமல் உள்ளது என்று தெளிவுபடுத்தியது. இந்த விவகாரம் அரசியல் எதிர்வினையையும் ஏற்படுத்தியது.*

*எதிர்கட்சிகள் , தங்கக் கையிருப்பை அரசு விற்றதாகக் குற்றம் சாட்டின. இந்தச் சூழ்நிலையில், இந்தியா உலகளவில் பங்குச் சந்தை மதிப்பீட்டில் (Capitalization) ஏழாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. தென் கொரியா ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது; அதற்கு முன் தைவான் இந்தியாவை முந்தியது. சில வாரங்களுக்குள்ளாகவே இந்தியா இரண்டு இடங்கள் பின்தங்கியுள்ளது.*

**ஆர்.பி.ஐ நடவடிக்கைகள் வெளிப்படையானவை!**

*2026 ஏப்ரல் 17 நிலவரப்படி, ஆர்.பி.ஐ-யின் 880.52 டன் தங்கம் 122 பில்லியன் டாலர் மதிப்புடையது. இறக்குமதி பாதுகாப்பு, வெளிநாட்டுக் கடன் பாதுகாப்பு மற்றும் தங்கத்தின் பங்கு ஆகியவை ரிசர்வ் வங்கியின் மாதாந்தர அறிக்கையில் வெளியிடப்படுகின்றன. இதனால் சந்தைகள் கொள்கை நம்பகத்தன்மையை மதிப்பிட முடிகிறது. இந்த வெளிப்படைத்தன்மை, எந்த விற்பனையும் அவசர நிலை அல்லாமல் நடக்காது, திட்டமிட்ட கையிருப்பு மேலாண்மையாகவே கருதப்படும் என்பதை உறுதி செய்கிறது.*

*இந்தியாவின் அதிகரிக்கும் தங்கக் கையிருப்பு, ரூபாய் பாதுகாப்பின் அடித்தளம் ஆகும்; இது டாலர் நிலைத்தன்மையின்மை மற்றும் புவியியல் அரசியல் அபாயங்களுக்கு எதிரான காப்பீடாகச் செயல்படுகிறது. இருப்பினும் தங்கத்தின் சக்தி அதன் லிக்விடிட்டி தன்மையிலும் உள்ளது. பங்குச் சந்தையில் அதிர்ச்சிகள் ஏற்படும்போது, அளவான தங்க விற்பனை உள்நாட்டு லிக்விட்டியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*

**உலகளாவிய சூழலில் பார்த்தால், பல மத்திய வங்கிகள் தங்கத்தை அதிகமாக வாங்கி வருகின்றன. டாலர் மதிப்பின் அதிர்வுகளைச் சமாளிக்க தங்கம் பாதுகாப்பான கருவியாக இருக்கும் என்பதே அதற்குக் காரணம். இந்தியாவும் இதே பாதையில்தான் நடந்துவருகிறது.**

*ஆர்.பி.ஐ-யின் தங்கக் கொள்கை இரண்டு நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. அமைதியான காலங்களில் கையிருப்பை அதிகரித்து சமநிலைக் கணக்கை வலுப்படுத்துவது மற்றும் உலகளாவிய குழப்பம் உள்நாட்டு விலைகளை அச்சுறுத்தும்போது தேர்ந்தெடுத்து விற்பனை செய்து பணவீக்கத்தைக் குறைப்பது. ரூபாயின் பணப்புழக்கத்தை உள்வாங்குவதன் மூலம் விலை உயர்வு கட்டுப்படுத்தப் படுகிறது. அந்த வகையில், 880.52 டன் தங்கக் கையிருப்பு வெறும் உலோகம் அல்ல; அது செயலில் இருக்கும் (Policy instrument) பணவியல் கொள்கைக் கருவி.*

*இந்தியாவின் தங்கக் கையிருப்பு சுமார் 880 டன். தங்கம் உலகளாவிய அதிர்வுகளைச் சமாளிக்க ஒரு பாதுகாப்புக் கருவியாகவும், நாட்டு நிதி வலிமையின் அடையாளமாகவும் உள்ளது. காரணம், வெளிநாட்டு நாணயக் கையிருப்பை அதிகரித்து ரூபாயைக் காப்பாற்ற வேண்டும் என்பது குறித்த ஆய்வுகள், கருத்துகள் வெளியிடப்பட்டு வந்தன.*

*வதந்திகள், தங்கத்தின் விலை உயர்வு மூலப்பணவீக்கத்தை (core inflation) அதிகரிக்கிறது என குறிப்பிட்டன. ரிசர்வ் வங்கியின் அறிக்கைகளிலும் இது வெளிப்படையாகச் சொல்லப்பட்டது. தங்கத்தை விற்றால் உள்நாட்டுத் தேவை குறைந்து விலை*




குறையலாம், அதனால் பணவீக்கம் தணியலாம் என்ற கருத்தும் வந்தது. ஆனால், உணவுப் பொருள்கள் மற்றும் உலகளாவிய எரிபொருள் விலை மாற்றங்களே பணவீக்கத்தை அதிகம் பாதிக்கின்றன. ரிசர்வ் வங்கியின் தங்கம் சார்ந்த நடவடிக்கைகள் மிகக் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தும்.

**ரூபாய் பாதுகாப்பு!**

ரிசர்வ் வங்கி வழக்கமாக டாலர் விற்பனை மூலம் ரூபாயைக் காப்பாற்றுகிறது. காரணம், தங்க விற்பனை அரசியல் ரீதியாகவும், சந்தை நம்பிக்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். ரிசர்வ் வங்கியின் நீண்டகால நோக்கம் அந்நிய செலாவணிக் கையிருப்பை பல்வகைப்படுத்துவது (Diversification), குறுகிய காலத்தில் மோசமான விளைவுகளைத் தவிர்ப்பது.

**உலகளாவிய பார்வை!**

உலகளாவிய சூழலில் பார்த்தால், பல மத்திய வங்கிகள் தங்கத்தை அதிகமாக வாங்கி வருகின்றன. டாலர் மதிப்பின் அதிர்வுகளைச் சமாளிக்க தங்கம் பாதுகாப்பான கருவியாக இருக்கும் என்பதே அதற்குக் காரணம். இந்தியாவும் இதே பாதையில்தான் நடந்துவருகிறது. எனவே, தங்கத்தை விற்றதாகக் கூறப்படும் செய்திகள் உலகளாவிய போக்குடன் முரண்படுகின்றன. எனவே, இது உண்மையாக இருக்க வாய்ப்பில்லை. கையிருப்பு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றங்களைத் தவறாகப் புரிந்துகொண்டதே காரணம். உண்மையில், ரிசர்வ் வங்கி தங்கத்தை விற்கவில்லை என்றே தெரிகிறது.

**விளைவுகள்!**

- ரிசர்வ் வங்கியின் தங்கக் கொள்கை தெளிவாக இல்லாததால் குழப்பம் ஏற்பட்டது.
- வெளிப்படையான தகவல் இல்லாததால் வதந்திகள் அதிகரிக்கின்றன.
- உலக நாடுகள் தங்கத்தை வாங்கிக்கொண்டிருக்கையில், இந்தியா விற்றதாகச் சொல்வது முரண்பாடாகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி, ஜூன் 5 அன்று தனது இருமாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் பணவியல் கொள்கைக் குழுக் கூட்டத்தின் முடிவில், அடுத்த இரண்டு மாதங்களுக்கான புதிய ரெப்போ வட்டி விகிதத்தை அறிவித்தது. வட்டி விகிதத்தை 5.25% ஆகத் தொடர்ந்து வைத்திருக்கவும், நடுநிலையான நிலைப்பாட்டைப் பேணவும், காத்திருந்து கவனிக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவும் முடிவு செய்தது.

இந்திய ரிசர்வ் வங்கி, நாணய விற்பனைப் பிரச்னை குறித்து எந்தக் குறிப்பையும் வெளியிடவில்லை. அமெரிக்க டாலர், வேறு எந்த அந்நியச் செலாவணி அல்லது ரூபாய் என எதுவாக இருந்தாலும், தங்கத்தைப் பணமாக்குதல் நடவடிக்கை என்பது இருக்காது என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் தெளிவுபடுத்தினார்.

அந்நியச் செலாவணிக் கையிருப்பு 682 பில்லியன் டாலராக உள்ளது என்றும், அது 11 மாத இறக்குமதிகளைப் பூர்த்தி செய்யும் என்றும் அவர் அறிவித்தார். இப்படியாக, தங்க விற்பனைப் பிரச்னை குறித்த விவாதம் முடிவுக்கு வந்தது.

இந்த விவாதம் அடங்கினாலும், முக்கியமான கேள்வி ஒன்று இன்னும் தொடர்கிறது. உலகளாவிய அதிர்வுகளின் காலத்தில், இந்தியா எவ்வாறு பணவீக்கக் கட்டுப்பாடு, ரூபாய் பாதுகாப்பு மற்றும் கையிருப்பு பல்வகைப்படுத்தலை சமநிலைப்படுத்தப் போகிறது என்பதே அந்தக் கேள்வி.

இதற்கு ரிசர்வ் வங்கி என்ன பதில் வைத்திருக்கிறது?